# LFS

**LITERARY FINDINGS**

**INTERNATIONAL JOURNAL OF MULTIDISCIPLINARY RESEARCH**

**ISSN: 2278-2311**

**VOL: 1** **ISSUE: 4**

**JANUARY -2016**



**Editor**

**Dr. P. Sathyamoorthy**
Madurai Kamarajar University
Madurai.

**Editorial Board**

**Dr. C. Thiyagarajan**
Annamalai University, Chidambaram.

**Dr. K. Ramesh**
Thiruvalluvar University
Vellore.

**Dr. S. Srinivasan**
Sri Venkateshwara College,
(Delhi University)
New Delhi.

**R. Chandrasekaran**
Aringar Anna Arts and Science College,
Namakkal.

**Dr. K. Sankaranarayanan**
University of Madras
Chennai.

**Dr. S. Aranganathan**
Tamilnadu open University
Chennai.



**Kongunadu Publications (India) Pvt.Ltd**
118,Mettur Road 2nd Floor,
Mettur Road, Erode – 638 011.
Ph: 0424 – 4562211,2263197
E-mail: kongunadupublications@gmail.com
Web: www.kongunadupublications.com



**ஆசிரியர்**

**முனைவர் போ. சத்தியமூர்த்தி**
*மதுரை காமராஜர் பல்கலைக்கழகம்,மதுரை.*

**ஆசிரியர் குழு**

**முனைவர் சி. தியாகராசன்**
*அண்ணாமலைப் பல்கலைக்கழகம், சிதம்பரம்.*

**முனைவர் க. இரமேஷ்**
*திருவள்ளுவர் பல்கலைக்கழகம்,வேலூர்.*

**முனைவர் ச. சீனிவாசன்**
*ஸ்ரீ வெங்கடேஸ்வரா கல்லூரி*
*(தில்லி பல்கலைக்கழகம்) புது தில்லி.*

**இரா. சந்திரசேகரன்**
*அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரி, நாமக்கல்.*

**முனைவர் கி.சங்கரநாராயணன்**
*சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை.*

**முனைவர் சு. அரங்கநாதன்**
*தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம்*
*சென்னை.*

முனைவர்.பா.சங்கரேஸ்வரி
மதுரை காமராசர் பல்கலைக் கழகம்
மதுரை.



KONGU

**கொங்குநாடு பப்ளிகேஷன்ஸ் இந்தியா பி.லிட்**
*194, கண்ணா காம்ப்ளக்ஸ்,*
*2- வது தளம், மேட்டூர் ரோடு, ஈரோடு - 638 011.*
*மின்னஞ்சல்:* kongunadupublications@gmail.com

# காலடுவெல்லின் இந்தியப் பிரவேசமும் இறைப்பணிப் பின்புலமும்: சில புரிதல்கள்

முனைவர்ச.சீனிவாசன்,

*தமிழ் இணைப்பேராசிரியர் ஸ்ரீ வெங்கடேஸ்வரா கல்லூரி*

*(தில்லிப் பல்கலைக்கழகம்), புது தில்லி-110 021.*

மேலை நாடுகளிலிருந்து தமிழ் நாட்டிற்கு வந்து பல திருத்தொண்டர்கள் இறைப்பணியாற்றியுள்ளனர். இறைப்பணியாற்ற வந்த அறிஞர்கள் தங்கள் சமயப்பணியோடு தமிழ் மொழியின் இலக்கண இலக்கிய வளர்ச்சிக்கும், தமிழர்களின் சமுதாய வளர்ச்சிக்கும் பெருந்தொண்டாற்றியுள்ளனர். இவ்வறிஞர்களுள் இராபர்ட் கால்டுவெல் (*Bishop Dr. RobertCaldwell-1814-1891* )ஒரு அர்ப்பணிப்பு உணர்வுடைய சீர்திருத்தவாதியாகக் (*Dedicated Social Reformist*) கருதப்படுகிறார்.இருநூற்றாண்டுகளுக்கு(1814-2014) முன்னர் வாழ்ந்த பாதிரியார் கால்டுவெல், இறைப்பணி என்ற பெயரில் இந்திய மண்ணில் தடம் பதித்த பின்புலம், தமிழ் மண்ணில் அவர் முன்மொழிந்த திராவிடக் கருத்தியலின் உள்நோக்க அரசியல் குறித்த சில புரிதல்களை முன்வைப்பதாக இக்கட்டுரை அமைகிறது.

ஸ்காட்லாந்தைச் சேர்ந்தவரும் அர்ப்பணிப்பு உணர்வுடையவருமான கால்டுவெல் திராவிட மொழிகளுக்குப் புத்துயிர் அளித்தவர் திராவிட மொழிகள் சமஸ்கிருதத்திலிருந்து தோன்றியவை என்ற எண்ணத்தைத் துடைத்தெறிந்தவர்என்றெல்லாம் போற்றப்படுகின்றார். கால்டுவெல்லின் 'திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்' (1856) என்ற நூல் வெளிவந்த பிறகுதான் தாழ்ந்து கிடந்த தமிழர்கள் நிலை தலை நிமிர்ந்ததாகக் கருதப்படுகிறது.

திராவிட மொழிகளிலே தமிழ் மிகவும் பண்பட்ட மொழி; சமஸ்கிருதத்தின் துணையின்றித் தனித்தியங்கும் ஆற்றலும் வளர்ந்து ஓங்கும் வல்லமையும் பெற்ற மொழி என்றார் கால்டுவெல். ஆரியர்களுக்கும் திராவிடர்களுக்கும் இடையேயான மொழி மற்றும் இனப்பிரிவை-திராவிடக் கருத்தாக்கத்தை முதன்முதலில் கட்டியவர் கால்டுவெல். தமிழின் தொன்மை, தூய்மை, தனித்தன்மை மற்றும் வளமான கலாச்சாரம் பாரம்பரியம் ஆகியவற்றை முதன்முதலில் புகழ்ந்துரைத்தவர் கால்டுவெல். தமிழ்ச் சூழலில் திராவிடம் என்னும் கருத்தாக்கத்தை முதன்முதலில் கையாண்டவர் கால்டுவெல். திராவிடம் X ஆரியம் என்னும் மொழி மற்றும் இன ரீதியான பிரிவினையையும் முன்வைத்தவர் கால்டுவெல் (அ.மாரியப்பன், 2002:32) என்றும் அவர் முன்நிறுத்தப்படுகின்றார்.

இறைவனின் வழி நடத்தலுக்குத் தன்னை அர்ப்பணித்துக்கொண்டவர், தாய்ப்பற்றைவிட இறைப்பற்று மிக்கவர், இளம் வயதிலேயே இறை வழிபாட்டில் ஈடுபாடு கொண்டிருந்தவர், ஆன்மீகம் குறித்து ஆழமாகச் சிந்தித்தவர், சாணார்கள் ( நாடார்கள் ) கல்வி கற்றிடவும், அவர்கள் மீதான சாதி இழிவுகள் அகற்றிடவும் பாடுபட்டவர் என்றெல்லாம் அறியப்படுகின்றார். இவையெல்லாம் அவரது அறியப்பட்ட முகம். கால்டுவெல்லின் அறியப்படாத மற்றொரு முகம் அவர் குறித்த மறுவாசிப்பின் மூலம் வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

இந்திய வளங்களைச் சூறையாடவேண்டும், இந்தியாவில் கிறித்தவத்தைப் பரப்பவேண்டும் என்ற கிழக்கிந்தியக் கம்பெனி ஆட்சியின் குறிக்கோளை நிறைவேற்றும் வகையில் இறைப்பணி என்ற



Self Attested